# ஜெபத்திற்காக விடப்படும் ஓர் அழைப்பு

## சகோ.பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

4

படங்களுடன்

# உன்னுடைய விரைப்புத்தன்மையை (இறுமாப்புத்தன்மையை) ஜெபத்தினால் இனிமையாக்கு;



செய்தி: கேள்விகளும் பதில்களும் #4, 64-0830 E, கேள்வி எண் 405

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

புற்று நோயால் பீடிக்கப்பட்டு, அது அவர்கள் சரீரங்களில் படர்ந்து தொங்கினவர்களாய் ஜனங்கள் மேடைக்கு வருவதைப் பார்த்திருக்கிறேன். அப்படிப்பட்ட சமயத்தை உடையவனாக இருந்தேன். ஜெபம் ஏறெடுக்கப்பட்ட போது, அவர்கள் பெற்றிருந்த அந்தப் புற்று நோய் அவர்களுக்காக நான் ஜெபிக்கும் போது, வெளிரி, தரையில் விழுந்து உருண்டோடிப் போகும்.



செய்தி: காணக்கூடாதவைகளை நோக்கிப்பார்த்தல், 50-0816, பத்தி எண் E-8

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

தானியேல் ஜெபித்தார். ஆனால் தூதன், ‘அவர் ஜெபம் ஏறெடுத்து இருபத்தியொரு நாட்கள் ஆன பிறகும், அந்தத் தூதன் இவரைச் சந்திக்க கூடாத அளவிற்கு அவருக்கு அங்கே பிரச்சனை உண்டாயிருந்தது’ என்று கூறினார். ஆகவே எதிலும் அவசரம் காட்டாதீர்கள்; விசுவாசிக்க மட்டும் செய்யுங்கள்; விசுவாசமுடையவர்களாயிருங்கள்.




செய்தி: தேவதூதன், 51-0720, பத்தி எண் E-23

சகோ.வில்லியம் பிரன்ஹாம்


நண்பர்களே, நீங்கள் அதிகமாக
சிரிக்கலாம்; நீங்கள் அதிகமாகப் பேசலாம்;
நீங்கள் அதிகமாக நடந்து செல்லலாம்;
ஆனால் நீங்கள் அதிகமாக ஜெபிப்பதில்லை.
செய்தி: கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?, 50-0824, பத்தி எண் E-25
சகோ.வில்லியம் பிரன்ஹாம்


செய்தி: பெர்கமு சபைக்காலம், 60-1207, பத்தி எண் 31
சகோ.வில்லியம்
பிரன்ஹாம்
மேலும் இப்போது, எல்லாவற்றிற்கும் மேலாக, ஒருவருக்காக ஒருவர் ஜெபியுங்கள். பிசாசு எங்காவது எந்த கசப்பையும் விதைக்க அனுமதிக்காதீர்கள். பாருங்கள்? இந்த மணி நேரத்தில் உங்கள் ஆத்துமாவை பரிசுத்தமாய்க் காத்துக் கொள்ளுங்கள்...


...ஒரு மனிதனுக்காக, அவனுடைய மனைவி
ஜெபிக்கும் போது, தேவன் அம்மனிதன் மேல்
அசைவாடுவார்; அல்லது அது போலவே ஒரு மனிதன்
தன் மனைவிக்காக ஜெபிக்கும் போது, அவள் மீது
தேவன் அசைவாடுவார்.
செய்தி: சகேயு, 58-0517, பத்தி எண் E-32
சகோ.வில்லியம் பிரன்ஹாம்

...அவள் உடம்பில் துணியே இல்லாமல் போகுமட்டும் நீ அவளை அடிக்கலாம்; எப்படியும் அவள் அதைச் செய்வாள். ஆனால், அவளை நீ தேவனுக்கு முன்பாகக் கொண்டு போ, அந்தப் பிள்ளையின் ஆத்துமாவை தேவனிடத்தில் உரிமை கோரு. அதனுடனே தரித்திரு. நான் அறிந்தவைகளிலேயே, அதுதான் சிறந்த காரியம் என்று நம்புகிறேன். ஆம் ஐயா. நான் அறிந்துள்ளபடி அதுதான் சிறந்த தீர்வு, அது ஜெபமே.

செய்தி: கேள்விகளும் பதில்களும், 59-1223, பத்தி எண் 111

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



ஜெபம் சரியாக தேவனை மனிதனிடத்தில் கொண்டு வருவதில்லை. அது மனிதனை தேவனிடத்திற்குக் கொண்டு செல்வதாகும். பாருங்கள்? நீங்கள் ஜெபிக்கும் போது, பூமிக்குரிய காரியங்களை பார்ப்பதை இழந்து - இழந்து விடுகிறீர்கள். எங்கோ ஓரிடத்திற்குச் சென்று விடுகிறீர்கள். மேலே, மேலே, மேலே, எட்டாத தூரத்திற்கு அவருடைய பிரசன்னத்திற்குள் வருமட்டுமாய் செல்கிறீர்கள்.

செய்தி: நீர் சகலத்தையும் அறிகிறவர், 52-0716, பத்தி எண் E-17

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

மேலும் ஜெபத்தின் மூலமாகவே இன்று நான் ஜீவிக்கிறேன். நான் தேவனுடைய கிருபையால் ஜெபத்தின் மூலமாக ஜீவிக்கிறேன்.



செய்தி: கேள்விகளும் பதில்களும், 61-1015 M, பத்தி எண் 10

சகோ.வில்லியம் பிரன்ஹாம்